பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 04 ஞாயிற்றுக்கிழமை 19.12.2021 கதிர் 272

## முகமாலை விபத்தில் இரண்டு பேர் காயம்!

கிளிநொச்சி மாவட்டம், பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

முகமாலை ஏ - 9 வீதியில் யாழ். நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் ☞2

# ஒரே நாளில் 55 இந்திய மீனவர்களை சிறைப்பிடித்தது இலங்கை கடற்படை

## கடும் அதிருப்தியில் டில்லி அரசு



(ந.லோகதயாளன்)

இலங்கையின் வடபகுதி கடற்பரப்புக்குள் 8 ட்ரோலர் படகுகளில் அத்துமீறி உள்நுழைந்த 55 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்தின் பேரில் இன்று அதிகாலை ☞2

## பல்கலை அனுமதிக்கான காத்திருப்புக் காலம் இனி இல்லாமலாக்கப்படும் என அரசு அறிவிப்பு



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் வரையான 10 மாதங்களுக்கும் மேலான காத்திருப்பு இடைவெளியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அவிசாவளையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இதனைக் ☞2

## கிளிநொச்சியிலிருந்து கதிர்காமம் சென்றவர்கள் விபத்தில் சிக்கினர்

### 17 பேர் வைத்தியசாலையில்

கிளிநொச்சியிலிருந்து கதிர்காமத்துக்குப் பயணித்த பஸ் விபத்துக்குள்ளானதில் 17 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பதியத்தலாவை பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## அரசியல் தீர்வில் சீன அரசு அக்கறை செலுத்தவில்லை

### சம்பந்தன் குற்றச்சாட்டு



போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர். ஆனால், சீனா நாட்டின் அரசு இது தொடர்பில் இதுவரை அக்கறை செலுத்தவில்லை.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் ட்சீ சென்ஹோங் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு கடந்த சில தினங்களாக பயணம் மேற்கொண்டிருந்தனர். இந்தப் பயணம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ☞2

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து 8 வயதுச்சிறுவன் உயிரிழப்பு

### பருத்தித்துறையில் சோகம்

தோட்டக்காணி கிணற்றில் தூண்டில் போட்டு மீன்பிடித்த 8வயதுசிறுவன்கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை, திக்கம் நாச்சிமார் கோயிலடியில் இன்று ☞2

## கிளிநொச்சியில் கிணற்றில் தவறி வீழ்ந்து 4 வயது சிறுமி பரிதாபச் சாவு

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி, அம்பாள்குளம் பகுதியில் இன்று காலை கிணற்றில் தவறி வீழ்ந்து 4 வயதுச் சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

யசிந்தன் டன்சிகா எனும் சிறுமியே இவ்வாறு பலியாகியுள்ளார்.

வீட்டு முற்றத்தில் நின்று குறித்த சிறுமி விளையாடிய வேளை தாயார் பேத்தியாருக்கு உணவு எடுத்துச் சென்று அரை மணி நேரத்துக்குள் திரும்பியபோது சிறுமியைக் காணாது தேடியுள்ளனர்.

இதன்போது அருகில் இருந்த கிணற்றை ☞2

## சடலமாக மீட்கப்பட்ட சிறுமியின் உயிரிழப்புக்கான காரணம் சட்ட மருத்துவ அறிக்கையில் வெளியீடு

### கைதான உறவினர் ஒருவர் தீவிர விசாரணைக்குள்

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு - மூங்கிலாறில் பற்றைக்காணிக்குள் சடலமாக மீட்கப்பட்ட 12 வயதுச் சிறுமி, அவரது அந்தரங்க உறுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று சட்ட மருத்துவ வல்லுநர் அறிக்கையிட்டுள்ளார்.

அதனடிப்படையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

யோகராசா நிதர்ஷனா (வயது - 12) என்ற சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

திருகோணமலையில் மாணவர் விடு ☞2

## காணிப் பிணக்கு தொடர்பில் காதர் தலைமையில் கூட்டம்



(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காணிப்பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காணிப்பிணக்குகள் காணப்படும் ☞2

## முகமாலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சைக்கிள் திடீரென வீதியில் தடம்புரண்டு தாழ்பளைநோக்கிசென்றுகொண்டிருந்த ஹயஸ் ரக வாகனத்துடன் மோதியது.

இதையடுத்து ஹயஸ் வாகனம் சடுதியாக நிறுத்தப்பட்டபோது பின்னே வந்துகொண்டிருந்த ஓட்டோ வேகக் கட்டுப்பாடை இழந்து ஏ - 9 வீதியருகே கவிழ்ந்தது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நபரும், ஓட்டோவில் பயணித்த சாரதியும் படுகாயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## பல்கலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூறினார்.

இந்த வருடத்துக்கான ஜி.சீ.ஈ. உயர்தரம், ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகள், திட்டமிடப்பட்ட திகதிகளில் எவ்வித மாற்றமுமின்றி நடைபெறும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## அரசியல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கான எந்தவொரு தூதுவரும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்தையும் பார்வையிட முடியும். அதற்கான உரிமை அவருக்கு உள்ளது. ஆனால், எம்மையும் எமது மக்களையும் பொறுத்த வரையில் சீனத் தூதுவரின் பயணம் முக்கியமானதல்ல.

எம்மைப் பொறுத்தவரையில் சீன நாட்டவரின் அடிப்படைக் கொள்கைகள் என்னவாக உள்ளன என்பதே எமது கேள்வியாகும்.

இலங்கையில் அரசியல் பிரச்சினைகள் பலமடைந்துள்ளன. சீனாவோ அல்லது சீனாவின் தூதுவரோ இனப்பிரச்சினை குறித்து அரசியல் தலைமைகளைச் சந்தித்து அதற்கான தீர்வுகளை முன்வைக்கவில்லை.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சமத்துவத்தின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும், நியாயத்தின் அடிப்படையில் வாழ வேண்டும் என்பது குறித்து சீனத் தரப்பினர் எதனையும் கூறவில்லை. வடக்கு மாகாணத்துக்கு பயணம் செய்த சீனத் தூதுவரும் அங்கும் அவ்வாறான கருத்துக்களைக் கூறவில்லை.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர்.

சீனத் தூதுவரின் வடக்குக்கான வருகையை நாம் எதிர்க்கவில்லை. அதேவேளை, இந்தப் பயணம் குறிப்பிட்ட ஒரு சில நோக்கங்களுக்காக மட்டுமே அமைந்துள்ளது எனக் கருதுகின்றோம்.

இனப்பிரச்சினை விடயத்தில் சீனாவின் நிலைப்பாடு என்னவிதமாக உள்ளது என்பதே எமக்கு முக்கியம். இந்த விடயத்தில் மக்கள் சிந்தித்து முடிவெடுப்பார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை - என்றார்.

## கிளிநொச்சியிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த விபத்து நேற்று அதிகாலை பதியத்தலாவை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கத்தையடுத்து பஸ் வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், படுகாயமடைந்த 17 பேர் மகா ஓயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பதியத்தலாவை போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிணற்றுக்குள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிற்பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நியந்தன் ரித்திக்குமார் (வயது-8) என்ற சிறுவனே உயிரிழந்தார்.

பெற்றோர் வேலைக்குச் சென்றுள்ளனர். சிறுவன் தோட்டக்காணியில் பட்டம் ஏற்றி விளையாடிவிட்டு சகோதரியுடன் இணைந்து தோட்டக்காணியில் உள்ள கிணற்றில் தூண்டில் போட்டு மீன் பிடித்தபோது, கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளான்.

சம்பவத்தை ஓடிச் சென்று உறவினர்களிடம் சகோதரி தெரிவித்துள்ளார். உறவினர்கள் சென்று கிணற்றில் தேடிய போது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை ஆதார மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவராசா, சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு அறிக்கையிட்டார்.

## கிளிநொச்சியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவதானித்தபோதே சிறுமி கிணற்றில் தவறி வீழ்ந்தமை தெரியவந்துள்ளது.

## சடலமாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தியில் தங்கியிருந்து கல்வி கற்ற அவர், கடந்த ஜூலை மாதம் வீடு திரும்பியிருந்தார். அதன்பின்னர் அவர் வீட்டிலேயே தங்கியிருந்தார்.

கடந்த 15ஆம் திகதி அவர் காணாமற்போனார் என்று புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சிறுமி வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ள பற்றைக் காணி ஒன்றில் நேற்று சடலமாகக் மீட்கப்பட்டார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசுதேவா முன்னிலையில் இடம்பெற்றது.

சிறுமியின் பெண் உறுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாகவே உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது என்று சட்ட மருத்துவ வல்லுநர் சட்ட மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில், சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டாரா? கருக்கலைப்புக்கு உட்படுத்தப்பட்டாரா? சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டாரா? போன்ற கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் உறவினர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காணிப்பிணக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் நேற்று இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது வேணாவில் பகுதியில் கடந்த காலத்தில் காணி வேண்டி போராட்டம் மேற்கொண்ட 20 குடும்பங்களுக்குக் காணியும் வீட்டுத்திட்டமும் வழங்கும் நடவடிக்கை பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனக் கிராம மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந் மற்றும் காணிப்பகுதி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

## ஒரே நாளில் 55 இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த கைது நடவடிக்கைகள் இடம்பெற்றமை இந்தியத் தரப்பில் கடும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய மீனவர்களின் 6 படகுகளில் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 43 மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் ஊடுருவிய வேளை சிறைப் பிடிக்கப்பட்டவர்கள் மயிலிட்டித் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டனர்.

இதன்போது தென்னரசு, லியோன், பீட்டர், கருப்பையா, பினால்டன் ஆகியோர் செலுத்தி வந்த படகுகளே கடற்படையினரிடம் சிக்கின.

கைதுசெய்யப்பட்ட 43 மீனவர்களும் 6 படகுகளுடன் மயிலிட்டித் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டனர். 6 படகுகளும் மயிலிட்டித் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளன.

கைதான மீனவர்கள் கொரோனா அச்சம் காரணமாக குளோரின் விசிறப்பட்டு அன்டிஜன் பரிசோதனையின் பின்பு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேபோன்று தலைமன்னார் பகுதிக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த 12 இந்திய மீனவர்களை இரு படகுகளுடன் கடற்படையினர் இன்று கைதுசெய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களம் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.









வங்கியில் அடகு வைத்த
நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகைமாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.

076 825 7716 - ஆகாஸ்

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ரெலோவின் அதிமேதாவித்தனம்

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பர்.

அப்படி ஒரு வேலையைத்தான் செய்திருக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியாகத் தன்னைக் கூறிக்கொள்ளும் ரெலோ.

தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடனேயே ஓர் அர்த்தபூர்வமான உரையாடலை – கலந்தாலோசனையை – கூடச் செய்யாமல் அதிகப்பிரசங்கித்தனமாக ஏதோ பெரிய காய் நகர்த்தலைச் செய்வதாக எண்ணிக் கொண்டு, அக்கட்சியும் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் ஆரம்பித்த சூழ்ச்சித் திட்டம், தமிழ்த் தேசியத் தரப்புகளைப் பிரித்து வைக்கும் கைங்கரியத்தையும், தேவையில்லாமல் இந்தியாவுடன் உரசுப்படும் ஒரு சர்ச்சையையும் தேற்றுவித்திருக்கின்றது.

தமிழ்த் தரப்பின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பின் சிறிய சகோதரனான ரெலோவுக்கு அரசியல் பாடம் போதித்து, விடயத்தை விளங்கப்படுத்த வேண்டிய அளவுக்கு சிறுபிள்ளைத்தனமாக அரசியல் செய்ய முற்படுகின்றது ரெலோ.

ஏதோ, தமிழரசுக் கட்சி மற்றப் பக்கத்தில் நிற்கின்றது, அதன் கூட்டமைப்புப் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட்டுடன் சேர்ந்து தமிழரசுக்கு ஒரு சாத்துச் சாத்தலாம் என்ற எதிர்பார்ப்பில் – நம்பிக்கையில் – குசும்புத்தனத்தில் – ரெலோ முயற்சிக்குப் பின்னால் மேலும் சில கட்சிகள் அணி சேர, தமிழ்த் தேசியத் தரப்புகளை வெற்றிகரமாகக் கன்னை பிரித்து விட்டது ரெலோ.

இப்படிப் பகிரங்க வெளியில் தமிழ்த் தேசியத் தரப்புக்களைப் பிளவுபடுத்தும் சூழ்ச்சித் திட்டத்தின் சூத்திரதாரி – பின்புலம் – யார் என்பது ரெலோவுக்குத்தான் வெளிச்சம்.

பதின்மூன்றாம் திருத்தத்தை வலியுறுத்தும் தீர்மானம் ஒன்றைத் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு எடுக்க வேண்டும் என்ற பெயரில் ரெலோவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கூட்டத்தின் யோசனைத் திட்டத்தை வடக்கு, கிழக்கு சிவில் சமூகம் கடுமையாக எதிர்த்துள்ளது.

இந்தப் பிரச்சினையில் ஒற்றையாட்சி, சமஷ்டி என்ற பதங்களை ஏற்றுக் கொண்டு அரசியல் கட்சிகளும், அரசியல் வாதிகளும், கருத்துரைஞர்களும் தங்களுக்குள் மோதிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இந்த விடயத்தில் விவகாரம் ஒன்றே ஒன்றுதான். அதிகாரப் பகிர்வு என்ற பெயரில் பகிரப்பட்டவையை சிங்கள அரசு தான் விரும்பிய எந்த நேரத்திலும் திரும்பப் பறிக்க முடியும் என்றால், அத்தகைய ஒன்றுக்காக ஒன்றுபடுவதோ, குரல் எழுப்புவதோ அர்த்தமேயற்றது.

வடக்கு – கிழக்கு இணைப்பு விடயத்தில் இந்தியப் பிரதமர் ராகுல் காந்தி தம் வாயால் தமிழர் தரப்புக்கு உறுதிமொழி வழங்கினார். ஆனால் நீதிமன்ற நடவடிக்கையின் பெயரால் இணைப்புத் துண்டிக்கப்பட்டு பதினைந்து வருடங்கள் கடந்துவிட்டன. இந்தியாவினால் எதுவுமே செய்ய முடியவில்லை.

தமிழர் தரப்பின் ஏகோபித்த கோரிக்கையின் பேரில் 13 ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தை இந்தியா வலியுறுத்த, அதை வழங்க கொழும்பு இணங்கினால் கூட, அடுத்த நாளே அதனைக் கொழும்பு மீண்டும் பறித்து எடுத்து விட முடியும். அத்தகைய ஏற்பாட்டுக்காக ஏன் இந்தியாவுக்குப் பின்னால் தொங்க வேண்டும் என்ற கேள்வி நியாயமானது. ரெலோ தரப்பினர் இதனைச் சிந்திக்க வேண்டும்.

இந்தியா மூலம் 13 ஆவது திருத்தத்தின் முழுநடைமுறையாக்கத்தை வலியுறுத்துவதுதான் எமது நோக்கம் என்றால், மக்களிடம் அதற்கான ஆணையை ரெலோவும் மற்றத் தரப்புகளும் பெற்றிருக்க வேண்டும்.

சமஷ்டியை வலியுறுத்தி மக்களின் ஆணையைப் பெற்று எம்.பியாகிவிட்டு, நினைத்த நேரம் கொழும்பு பறித்து எடுக்கக் கூடிய ஏற்பாட்டுக்கு இணங்கிப்போவது முட்டாள்தனம்.

இடைக்கால ஏற்பாடாக அதை ஏற்கலாம், ஓர் ஆரம்பமாகக் கொள்ளலாம் என்று கூறுவது ஏற்புடையது என்றாலும், இடைக்கால ஏற்பாடு இடைக்காலத்திலேயே பறிக்கப்படக்கூடியது என்றால், அதற்கும் பின்னால் போவது அர்த்தமற்றது. அப்படிப் போவது குழப்பத்தையும், பின்னடைவையுமே தமிழர் தரப்புக்கு ஏற்படுத்தும்.

# தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்வு யோசனைகள் சிங்கள மக்களை மிரட்டுவனவாக அமையக்கூடாதாம்!

## வரதராஜப் பெருமாள் 'அட்வைஸ்'



தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்வு யோசனைகள் சிங்கள மக்களை சீண்டுவனவாகவோ, மிரட்டுவனவாகவோ அமையக் கூடாது என இணைந்த வடக்கு – கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

இந்த பேச்சுகள் வரவேற்கத்தக்க மிக முக்கியமான அரசியல் முன்னெடுப்பு என்றாலும் மிகவும் கவனமாக விடயங்கள் கையாளப்படவேண்டும்எனவும்தெரிவித்தார்.

தமிழ் பேசும் கட்சிகளால் எட்டப்படும் ஒருமித்த யோசனைகள், இலங்கைக்கும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கும் கையளிக்கப்படவுள்ளன.

எனவே பிரிவினை, தீவிரவாதம் ஆகிய–வற்றைத் தூண்டாத வகையில் எட்டப்படும் இந்தத் தீர்வு யோசனைகள் தொடர்பாக சிங்கள மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டும் என்றும் வரதராஜப் பெருமாள் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக ஒற்றையாட்சி முறைமைக்கு விரோதமாகத் தமிழர் தரப்பால் கருத்துக்கள் பகிரப்பட்டால், அது சிங்கள பௌத்த கடும்போக்காளர்களைக் குழப்பிவிடும் என வரதராஜப் பெருமாள் சுட்டிக்காட்டினார்.

இருக்கின்ற அரசியல் நிலைமைகளை குழப்பிக் கொள்ளாமல், இராஜதந்திர ரீதியில் காய் நகர்த்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தக் கூட்டணிக்கு வெளியில் நிற்பவர்கள் ஏன் இதனைக் குழப்ப முயற்சி செய்கின்றார்கள் என்றும் வரதராஜப் பெருமாள் கேள்வியெழுப்பினார்.



# மருதானையில் தீ விபத்து இரு வீடுகள் எரிந்து நாசம்

மருதானை தேவநம்பியதிஸ்ஸ மாவத்தையில் உள்ள இரண்டு வீடுகள் நேற்று (சனிக்கிழமை) தீக்கிரையாகியுள்ளன.

இரண்டு தீயணைப்பு வாகனங்களை அனுப்பி தீயை கட்டுப்படுத்த கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ள போதிலும், இரண்டு வீடுகளின் தளவாடங்கள் தீயால் எரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வீட்டின் மாடியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், காலையில் வேலைக்குச் செல்வதற்கு முன்பாக மின்விளக்குகளை எரிய விட்டு சென்றமையால் தீ பரவியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# புதையல் பொருள் ஒன்றினை கடத்த முற்பட்ட இருவர் கைது

திருகோணமலை – கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதையல் பொருளொன்றைக் கடத்த முற்பட்ட இருவரை கடந்த சனிக்கிழமை கந்தளாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தளாய் மற்றும் குருணாகல் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 27 வயதுடைய இருவரையே இவ்வாறு கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்கள் புதையலில் பெறப்பட்ட பழங்கால பொருளொன்றைத் திருகோணமலை பகுதியிலிருந்து கொழும்புக்கு கடத்துவதற்கு முயன்ற நிலையிலே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மறைந்திருந்து சுற்றிவளைப்பு மேற்கொண்டு சந்தேக நபர்களை ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான புதையல் பொருளுடன் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொல்பொருள் தொடர்பான அறிக்கைகளைப் பெறவுள்ளதோடு, சந்தேக நபர்கள் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னிறுத்த உள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# பிலிப்பைன்ஸில் சூறாவளி; உயிரிழப்பு எண்ணிக்கை 75 ஆக உயர்வு

பிலிப்பைன்ஸைத் தாக்கிய புயல் காரணமாக குறைந்தது 75 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 195 கி.மீ. வேகத்தில் வீசிய புயல் காரணமாக 300,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் இழப்பு குறித்து முழுமையாக அறிவிக்கப்படவில்லை. போஹோலின் தற்போதைய இறப்பு எண்ணிக்கை 49 ஆக உள்ளது, மேலும் குறைந்தது 10 பேரைக் காணவில்லை என்று ஆளுநர் யாப் கூறினார். சனிக்கிழமையன்று, பிலிப்பைன்ஸின் பேரிடர் நிறுவனம், போஹோல் உட்பட இறந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக இருந்ததாகக் கூறியது. இதே வேளை நாட்டின் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் ஆயிரக்கணக்கான இராணுவம், கடலோர காவல்படை மற்றும் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.



# பாகிஸ்தானிலுள்ள வங்கியில் வெடி விபத்து பதின்நான்கு பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

பாகிஸ்தானின் தெற்கு நகரமான கராச்சியில் உள்ள வங்கி ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கழிவுநீர் வடிகாலில் இருந்து வந்த வாயு கசிவு காரணமாக ஏற்பட்டதாக நம்பப்படும் இந்த குண்டு வெடிப்பில் மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர்.

இடிபாடுகளில் பலர் புதையுண்டுள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

ஹபீப் வங்கி கட்டடத்தின் யன்னல்கள் மற்றும் கதவுகள் வெடித்து சிதறியமையையும், வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டமையையும், ஆவணங்கள் தெரு முழுவதும் சிதறிக் கிடக்கின்றமையையும் காணொலி காட்சிகள் காட்டுகின்றன.



# அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எட்டு லட்சத்தைக் கடந்தது

அமெரிக்காவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டு லட்சத்தைக் கடந்துள்ளது. இது உலக அளவில் அதிகபட்ச கொரோனா உயிரிழப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் கடந்த திங்கட்கிழமை நிலவரப்படி, கொரோனாவால் சுமார் 50 மில்லியன் (ஐந்து கோடி பேர்) பாதிக்கப்பட்டனர் என தரவுகள் கூறுகின்றன. கொரோனா தடுப்பூசிசெலுத்திக்கொள்ளாதவர்கள்மற்றும்வயதானவர்கள் தான் 2021ஆம் ஆண்டில் அதிகம் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் கடந்த 11 வார காலத்தில் கொரோனா வைரஸால் ஒரு லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த 11 வார காலத்தில் கடந்த காலத்தை விட வேகமாக உயிரிழப்பு நடந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்!




ஆப்கானிஸ்தானின் பைசாபாத் நகரில் இருந்து 33 கிலோமீற்றர் மேற்கில் இன்று அதிகாலை மிதமான அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் 4.8 ரிச்டராக பதிவாகி உள்ளதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தில் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான தகவல்கள் இதுவரையில் வெளியாகவில்லை




# சுவீடனின் பால்டிக் கடலில் இரு சரக்குக் கப்பல்கள் மோதல்

சுவீடன் கடலோர பகுதியில் பால்டிக் கடலில், 2 சரக்குக் கப்பல்கள் மோதி விபத்துக்குள்ளாகின. இதில், ஒரு கப்பல் கவிழ்ந்தது. மூழ்கிய கப்பலில் இருந்த இருவர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மீட்புப் படகுகள் மற்றும் ஹெலிக்கொப்டர்களால்இதுவரை மூழ்கிய படகில் இருந்த இருவரையும் இதுவரை கண்டறிய முடியவில்லை. விபத்துக்குள்ளான கப்பல் அமெரிக்க கொடியுடன் இருந்தது.

குளிர்ந்த நீரில் இருந்து அலறல் சத்தம் கேட்டதாக, சுவீடன் கடல்சார் நிர்வாக செய்தித் தொடர்பாளர் ஜோனஸ் பிரான்சன் கூறியுள்ளார்.

பால்டிக்கடற்பகுதியில்தெற்கு சுவீடன் கடலோர நகரமான யஸ்டாட் மற்றும் டென்மார்க் நாட்டின் தீவான போர்ன் ஹோல்ம் இடையே இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# கைதான தமிழக மீனவர்களும் அவர்களின் ட்ரோலர்களும்









இன்று அதிகாலை நெடுந்தீவுக் கடலில் ஆறு ட்ரோலர்களுடன் கைதான 43 இந்திய மீனவர்களையும் படங்களில் காணலாம். ஒவ்வொரு படகுக்கும் உரிய மீனவர்கள் தனித்தனி அணியாக. (படங்கள்: ந.லோகதயாளன்)

# தேர்தல் சீர்திருத்த பிரேரணையை அனைவரும் எதிர்க்கவேண்டும்

## திருமாவளவன் கோரிக்கை



தேர்தல் சீர்திருத்த பிரேரணைக்கு தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சியினரும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கலையரங்கம் வளாகத்தில் நிலத்தரகர்கள் நல சங்கத்தின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்தமை வருமாறு:-

நிலத்தரகர்களை அமைப்பு சாரா தொழிலாளர் பட்டியலில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையைநீங்கள்முன்வைத்துள்ளீர்கள். இது நியாயமான கோரிக்கைதான். எனவே தமிழக அரசு அவர்களை அமைப்புசாரா தொழிலாளர்களாக அறிவிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறோம்.

மக்களவையில் நாளை தேர்தல் சீர்திருத்த பிரேரணை தாக்கல் செய்யப்படவிருக்கிறது பல்வேறு பிரேரணைகளை தாக்கல் செய்தாலும், இந்த பிரேரணையை தாக்கல் செய்வதை அறிமுக நிலையிலேயே தடுக்க வேண்டும். தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சியினருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் விடுக்கக்கூடிய கோரிக்கை, இந்த பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட வேண்டும் என்பதாகும்.

இந்தச் சட்டத் திருத்த பிரேரணை வாக்காளர்களை, வாக்காளர் பட்டியலில் ஆதார் எண்ணோடு இணைப்பதற்கு வழிவகை செய்கிறது. இது மிகவும் ஆபத்தானது. தேர்தல் நேரத்தில் அவர்களுக்கு வாக்களிக்காத சிறுபான்மையினரை நீக்குவதற்கு இது ஏதுவாக அமைந்துவிடும். எனவே, இது மிகவும் ஆபத்தான பிரேரணை. இதை அனைத்துக் கட்சிகளும், ஜனநாயக சக்திகளும் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் வேண்டுகோள் விடுக்கிறது, என்றும் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



# இந்தியப் பிரதமர் மோடிக்கு பூட்டானின் உயரிய விருது

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பூட்டான் நாட்டின் உயரிய விருதை வழங்குவதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

பூட்டான் நாட்டின் 114 ஆவது தேசிய நாள் இன்று கொண்டாடப்பட்டுவருகிறது. இதனை முன்னிட்டு அந்த நாட்டு அரசு உலகளவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதுகள் வழங்கி வருகிறது.

இந்த நிலையில், இந்தியப் பிரதமர் மோடிக்கு 'நகடக் பெல் ஜி கோர்லோ' என்கிற உயரிய விருதை அளிப்பதாக பூட்டான் அரசு அறிவித்திருக்கிறது. இதைப் பகிர்ந்துகொண்ட அந்த நாட்டுப் பிரதமர் லோடே ஷேரிங், மோடியின் பெயர் விருதுக்கு தேர்வானது மகிழ்ச்சி அளிக்கிறது எனத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மோடி விருதுக்கு மிகவும் தகுதியானவர். பூட்டான் மக்களிடமிருந்து வாழ்த்துகள். உன்னதமான, ஆன்மீக மனிதனாக மோடி பார்க்கப்படுகிறார். இந்த கௌரவத்தை நேரில் கொண்டாட ஆவலுடன் காத்திருக்கிறோம். பல ஆண்டுகளாக, குறிப்பாக கொரோனாத் தொற்றுகளின்போதும் மோடியின் நிபந்தனையற்ற நட்பும் ஆதரவும் நீடிக்கிறது, என்றும் அவர் கூறியிருக்கிறார்.

# அரசியல் கட்சிப் பிரமுகர்கள் கொலை; கேரளாவில் மக்கள் மத்தியில் பதற்றம்




கேரளாவில் 12 மணிநேரத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்த ஒருவரும், பா.ஜ.கவைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேரளாவின் ஆலப்புழா மாவட்டத்தில் நடந்த இந்த கொலைகளால் அப்பகுதியில் ஏராளமான பொலிஸார் பாதுகாப்புபணிக்காக குவிக்கப்பட்டுள்ளனர். இந்த கொலைகளுக்கு அம்மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில செயலாளர் கே.எஸ்.ஷான் இருசக்கரவாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, காரில் வந்த மர்ம கும்பல் அவரை குத்திக் கொலை செய்துள்ளனர். பலத்த காயமடைந்தவர், கொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கபட்டுள்ளார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல பா.ஜ.கவைச் சேர்ந்த ரஞ்சித் ஸ்ரீனிவாசன் என்பவர் அடையாளம் தெரியாத நபர்களால் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளார். 12 மணிநேரத்தில் இரண்டு அரசியல்கட்சி பிரமுகர்கள் கொல்லப்பட்ட சம்பவம் மாநிலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் ஆலப்புழா மாவட்டத்தில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டு, விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தேவையற்ற கூட்டங்கள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோடியின் முடிவுகளால் ஏழை, நடுத்தர மக்களுக்கு கடுமையான பாதிப்பு என ராகுல் காந்தி விமர்சனம்



பிரதமர் மோடியின் முடிவுகளால் இந்திய ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என காங்கிரஸ் எம்.பி. யான ராகுல் காந்தி குற்றஞ் சாட்டியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் இன்னும் சில மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி தேர்தல் பரப்புரைக்கு முன்னோட்டமாக அமேதியில் ராகுல் காந்தி உரையாற்றினார். அப்போது பேசிய அவர், பிரதமரின் தவறான முடிவுகளால் வேலைவாய்ப்பின்மை மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

பணமதிப்பு நீக்கம், தவறான முறையில் ஜி.எஸ்.டி. அமுலாக்கப்பட்டமை, கொரோனா காலகட்டத்தில் போதிய உதவிகள் செய்யாதமை ஆகியவையே வேலை வாய்ப்பின்மை அதிகரிக்க முக்கிய காரணங்கள் என ராகுல் காந்தி தெரிவித்தார்.

கங்கை நதியில் நீராடி பிரபலம் தேடும் பிரதமர் மோடி வேலை வாய்ப்பின்மை பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கவில்லை என்றும் ராகுல் காந்தி விமர்சித்தார். இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவரான பிரியங்கா காந்தியும் பங்கேற்றார்

# தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த பிரதேசங்கள் வடக்கும் கிழக்கும் எங்களின் நிலங்கள்




காணியதிகாரம் வேண்டும். இதனைத்தான் நாங்கள் அரசியல் உரிமை வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். காணியதிகாரம் எங்களிடமிருந்தால் மயிலத்தமடு மாதவனையில் குடியேறியுள்ளவர்களை நாங்களே அதிகாரிகளிடம் கூறி வெளியேற்றியிருப்போம். அது நடக்காது போயிருந்தால் எங்களிடமிருக்கும் பொலிஸ் அதிகாரங்களை கொண்டு செயற்படுத்தியிருப்போம். இன்று நாங்கள் எதையும் செய்ய முடியாது உள்ளோம். எங்களிடம் எந்த அதிகாரமுமில்லை. இப்படி பயணித்தால் வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் இல்லாத நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம். வடக்கு, கிழக்கு என்று நாங்கள் பார்க்க முடியாது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த பிரதேசங்கள். அது எங்களின் நிலம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இன்று கிழக்கில் பாடசாலை நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர், எங்கள் கைகளில் அதிகாரம் கிடைக்கவில்லை. என்பதற்காக அதிகாரம் வேண்டாம் என்று எங்களினால் கூற முடியாது. அதிகாரம் எங்களுக்கு தேவையாக இருக்கிறது. மயிலத் தமடு பிரச்சினைக்கு நானும்நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாவும் இணைந்து வழக்குத் தாக்கல் செய்துள்ளோம். எங்களின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகி வழக்கு பேசி வருகிறார். அந்த வழக்கை கொண்டு இவர்களை வெளியேற்றுவது மட்டுமல்ல நோக்கம். அந்த இடத்தை மேய்ச்சல்தரையாக்க வேண்டும்.

தமிழர்களின் மேச்சல்தரையான மயிலத்தமடு மாதவனை, கெவிலியாமடு திபுலான, வட்டமடு போன்ற அனைத்தையும் பிரித்து ஏனைய சமூகங்களுக்கு கொடுக்க முனைப்பு நடந்துகொண்டிருக்கிறது. இதனை எங்கள் மக்கள் உணரவேண்டும். இவற்றையெல்லாம் மாற்றியமைக்க அரசியல் அதிகாரம் எங்களின் கைக்கு வரவேண்டும். காணியதிகாரம், பொலிஸ் அதிகாரம் எங்களுக்கு தேவை. பொலிஸ் அதிகாரம் எங்களிடம் இருந்தால் நாங்கள் விடயங்களை கையாளுவோம். இப்போது எங்களின் பிரச்சினைகளுக்கு கொழும்பில் இருந்துதான் அறிவித்தல்கள் வருகின்றன.

வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் இல்லாத நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம். வடக்கு, கிழக்கு என்று நாங்கள் பார்க்க முடியாது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த பிரதேசங்கள். அது எங்களின் நிலம் அதனைப் பாதுகாக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு சில வேலைத்திட்டங்களை செய்து கொண்டிருக்கிறது என்றார்.

## நீதித்துறை, நிருவாகத் துறை, சட்டவாக்கல் துறை ஆகிய மூன்று துறைகளினால் நாடு ஆளப்பட வேண்டும்

### கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

எந்தவொரு நாடும் நீதித்துறை, நிருவாகத் துறை, சட்டவாக்கல் துறை ஆகிய மூன்று துறைகளினால் ஆளப்பட வேண்டும். இந்த மூன்று துறைகளும் இன்று இலங்கையில் சீர்குலைந்து, ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பில் நேற்றைய தினம் பொத்துவில் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்றது. பொத்துவில் மற்றும் திருக்கோவில் பொலிஸ் நிலையங்களின் ஊடாக இவ்வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த விடயத்தைப் பார்க்கும் போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கான வழக்காக அது தென்படவில்லை. ஏனெனில் ஏற்கனவே திட்டமிட்டு இந்தப் பொலிஸ் நிலையங்களினால் 32 பெயர்கள் அடங்கிய ஒரே பெயர்ப் பட்டியலைக் கொண்டு இரண்டு பொலிஸ் நிலையங்களிலும் அதே பெயர்கள் உள்வாங்கப்பட்டு இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது. ஆனால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பிரபலமான சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளாத சிலருக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இதில் விசேடம் என்னவென்றால் செய்தி சேகரிக்க வந்த ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதிலிருந்து தெரிகின்ற விடயம் ஒன்றே தமிழ் மக்கள் அவர்களது உரிமைகளைக் கேட்டுப் போராடும் போது அவர்களை நசுக்குவதற்காக திட்டமிட்டு ஆர்ப்பாட்டம் தொடங்குவதற்கு முன்னமே சிலரது பெயர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கெதிராக வழக்குத் தொடர்ந்திருக்கின்றார்கள். இந்த நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கும் மக்களை நீதித் துறையினூ டாக அடக்கும் ஒரு அடக்குமுறையாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

எந்தவொரு நாடும் நீதித்துறை, நிருவாகத் துறை, சட்டவாக்கல் துறை ஆகிய மூன்று துறைகளினால் ஆளப்பட வேண்டும்.

இந்த மூன்று துறைகளும் இன்று இலங்கையில் சீர்குலைந்து, ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன. ஏனெனில் நீதித்துறை ஒழுங்காகக் செயற்படவில்லை என்பது இவ்வாறான வழக்குகள் மூலம் தெரிகின்றது. சட்டவாக்கல் துறை ஒழுங்கில்லை என்பது நாடாளுமன்ற நடவடிக்கைகள் குழு நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு ஜனவரி 11ஆம் திகதி என ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தும், ஜனாதிபதி தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தக் கூட்டத் தொடரை 18ஆம் திகதி ஒத்திவைத்திருக்கின்றார். இதனூடாகச் சட்டவாக்கல் துறையும் ஒரு சீரான நிலையில் இல்லை என்பது புரிகின்றது.

நிருவாகத் துறையும் இந்த நாட்டில் மோசமான நிலையில் இருக்கின்றது என்பது எமது மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் நியமனம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சீர்கேட்டினைக் கொண்டு அறிய முடியும் என்று தெரிவித்தார்.



## விழிப்புணர்வு செயலமர்வு

பாதுகாப்பு படையினருக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வுக் கூட்டம் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸின் ஒருங்கிணைப்பில் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலக கணக்காளர்கள், யூ.எல்.எம். ஜவாஹிர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஜௌபர், அனர்த்த நிவாரண அபிவிருத்தி உத்தியோகத்தர்களான றாசிக் நபாயிஸ், எம்.என். பஸ்மிலா, பொலிஸார், கடற்படை அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## இதயங்களை ஒன்றிணைக்கும் பாலங்கள் அபிவிருத்தி வேலை

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக இதயங்களை ஒன்றிணைக்கும் கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிராமிய வீதி அபிவிருத்தி உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஏறாவூரில் 2 பாலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஏறாவூர் நகரசபை தவிசாளர் எஸ்.எம் நளீம், பிரதித்தவிசாளர் எம்.எல்.றெபுபாசம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள் கோகுலன், லதாகரன் மற்றும் முன்னாள் நகரசபை தவிசாளர்களான எம்.ஐ.தஸ்லிம், எம்.சி.கபூர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரான எம். நசீர் மற்றும் ஊர் பிரதிநிதிகள் உலமாக்கள் என பலர் கலந்து கொண்டனர் .



## வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி சௌபாக்கியா விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் ஹனீபா தலைமையில் இடம்பெற்றது. இவ் வீட்டிற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக ஆறு லட்சம் ரூபா மானிய நிதியுதவியின் கீழ்,பயனாளிகளின் பங்களிப்புடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள மல்கம்பிட்டி கிராம சேவையார் பிரிவில் வசிக்கும் பயனாளிக்கே இவ்வீடு வழங்கி வைக்கப்பட்டது.

# அரவிந்தன் த.வி. கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் அல்லர்!

## அவரது அறிக்கைக்கு சங்கரி மறுப்பு



தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவராக தன்னைத் தானே பிரகடனப்படுத்திக் கொண்டு ஊடகங்களுக்கு அறிக்கைகள் விடுவதை அரவிந்தன் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவரை எமது கட்சி சிரேஷ்ட உப தலைவராகத் தெரிவு செய்யவில்லை எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம்வீ.ஆனந்தசங்கரியால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஆயுட்கால உறுப்பினர் பட்டியல் இன்று இல்லை. இருதடவை கட்சி பிளவுபட்டு ஆயுட்கால உறுப்பினர் பட்டியல் காலவதியாகிவிட்டது. இவ்வாறு கூறித்திரிவது கூட அரவிந்தனின் தந்திரங்களில் ஒன்றாகும்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவல நிலைமைகளை கருத்தில் கொண்டு அரசியல்ரீதியாகஎமதுமக்கள்ஒன்றிணைக்கப்பட வேண்டும் என அரவிந்தன் சொல்லும் அளவிற்கு அரசியல் தெரியாதவனல்லன் நான். அரவிந்தன் பிறப்பதற்கு 15 வருடங்களுக்கு முன்பாகவே அரசியலுக்கு வந்தவன்.

மிகச்சிறந்த அரசியல் தலைவர்களுடன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவன். கிளிநொச்சி தொகுதியில் என் கால் படாத இடமே கிடையாது. என்னுடைய அரசியல் பின்னணியும் வரலாறும் தெரியாமல் கருத்துக் கூறுகின்றமையை அரவிந்தன் நிறுத்திக் கொள்ள வேண்டும். 2018 ஆம் ஆண்டு வரை லண்டனில் இருந்து விட்டு எமது மக்களின் அவலநிலை தெரியாமல் அரசியல் பேசுகின்றார் அவர்.

தற்போதுள்ள அரசியல் யதார்த்த நிலையை நன்கு புரிந்து கொண்டுதான் நான் சமீபத்தில் ‘அந்நிய நாடுகளை தலையிடக் கோருவது மேலும் ஆபத்தை விளைவிக்கும்’ என்று ஊடக அறிக்கையில் தெரிவித்திருந்தேன். அதனை விளங்கிக் கொள்ளாத அவர், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக அறிக்கை விடுவதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகிய காலம்தொட்டு, தந்தை செல்வாவுடன் இணைந்து அவர் மறையும் வரை தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்து, அவர் மறைந்த பின்பும் அவரின் வழியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இன்று வரை தமிழ் மக்களின் ஒற்றுமைக்காகவும் அவர்களின் உரிமைக்காகவும் ஜனநாயக ரீதியில் போராடிக்கொண்டு நான் வருகின்றேன்.

எங்கிருந்தோ வந்து விட்டு தற்போது தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பது நகைப்பைத் தருகின்றது. பாவம் அவரது அரசியல் அறிவு அவ்வளவுதான். இல்லாத ஒரு பதவியை தனக்குத் தரப்பட்டது என்று பொய்களைக் கூறி எமது கட்சி உறுப்பினர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி கட்சிக்குள் உட்பூசலை உருவாக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன். இது அவரின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கைதாகி பின் சிறையினுள் உயிரிழப்பு

ஹுங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போயா தினத்தன்று மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பிரேமதிலக்க அமரவீர ஹுங்கம பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், ஹுங்கம பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறிது நேரத்தில் சிறையினுள் மயக்கமடைந்து விழுந்துள்ளார்.

பின்னர் ரன்ன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சந்தேக நபரின் மரணத்தையடுத்து அவரது உறவினர்கள் உள்ளிட்ட குழுவினர் கொழும்பு – கதிர்காமம் பிரதான வீதியின் ரன்ன பகுதியில் வீதியை மறித்து போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்



# தனிநபரால் 500 ஏக்கர் காணி ஆக்கிரமிப்பு

## வவுனியாவில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா பறண்நட்டகல் பகுதியில் தனி நபர் ஒருவர் 500 ஏக்கர் அரச காணியை அத்துமீறி அபகரித்துள்ளமைக்குஎதிர்ப்புதெரிவித்துபொதுமக்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. ஏ – 9 வீதியில் பறண்நட்டகல் சந்தியில் மழையையும் பொருட்படுத்தாமல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் –

எமது கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 500 ஏக்கர் காணியினை தனிநபர் ஒருவர் அபகரிக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றார்.

பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருக்கு தெரியப்படுத்தியும் எமக்கு எந்தவிதமான தீர்வும் கிடைக்கப்பெறவில்லை.

எமது கிராமத்தில் 500 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்துவரும் நிலையில் 200 இற்கும் மேற்பட்ட உப குடும்பங்களுக்கு காணிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

எனவே, அந்தக் காணியை மீட்டு காணியற்று இருக்கும் எமது கிராமத்தைச் சேர்ந்த உப குடும்பங்களுக்கு வழங்குமாறு உரிய அதிகாரிகளை நாம் வேண்டி நிற்கின்றோம். – எனத் தெரிவித்தனர்.

இந்த நிலையில், மேற்படி பகுதிக்குச்சென்றநாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், கு.திலீபன் மற்றும் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் ஆகியோர் பொது மக்களுடன் கலந்துரையாடியிருந்தமையுடன் ஆக்கிரமிக்கப்படும் பகுதியையும் பார்வையிட்டனர்.



# அகில இலங்கை சைவ மகாசபையால் திருவெம்பாவை பாதயாத்திரை ஏற்பாடு

திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையால் முன்னெடுக்கப்படும் பாதயாத்திரை நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொருவருடமும் ஆயிரக்கணக்கான இலங்கை தழுவிய சிவபக்தர்களை உள்ளடக்கியவாறு அகில இலங்கை சைவ மகா சபையால் பாதயாத்திரை முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் கொரோனா சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட சிவனடியார்களை மட்டும் உள்ளடக்கியவாறு இம்முறை சுகாதார வழிகாட்டுதல்களுடன் இடம்பெற்றது.

நேற்று காலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் – மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரத்தில் ஆரம்பமாகி சிவனுடைய நாணயங்களையும் தேவார பதிகங்களையும் உச்சரித்தவாறு பனிப்புலம், சுழிபுரம் பகுதிகளிலுள்ள ஆலயங்களை தரிசித்த வண்ணம் பொன்னாலை சந்திக்கு அருகில் அமைந்துள்ள இராவணேஸ்வரம் தலத்தில் யாத்திரை நிறைவடைந்தது.

மேலும் இந்த பாதயாத்திரையின் போது சுழிபுரம் மேற்கு ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயத்தில் அகில இலங்கை சைவ மகா சபையால் அச்சிடப்பட்ட நாள் காட்டி வெளியீடும் அதனைத்தொடர்ந்து பிடியரிசித்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

குறிப்பாக அறநெறி மாணவர்களிடம் பொதிப்பை ஒன்று வழங்கப்பட்டு அவர்களின் இல்லங்களில் உணவு தயாரிப்பின் போது ஒரு பிடி அரிசியை இட்டு அதனை நிரப்பி எதிர்வரும் தைப்பூச தினத்தில் அவை சேகரிக்கப்பட்டு ஏழை எளியவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பாதயாத்திரையில் அகில இலங்கை சைவ மகாசபையின் பொதுச்செயலாளர் வைத்தியர் பரா.நந்தகுமார், அகில இலங்கை சைவ மகா சபையின் பொருளாளர் அருள் சிவானந்தன், இலங்கை சித்தர் பீட நிறுவுநரும் குருமுதல்வருமான நவனீத சித்தரும், சிவனடியார்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அதிவேக நெடுஞ்சாலையில் 10 வாகனங்கள் விபத்து!

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் 10 வாகனங்கள் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தொடங்கொட 34 கிலோமீற்றர் கம்பத்திற்கு அருகில்கடந்தவெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லொறி ஒன்று, 3 சொகுசு பஸ்கள், 2 ஜீப்கள், 4 கார்கள் இந்த விபத்தில் சிக்கியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2021இல் வெளியிடப்பெற்றது.